26.08.2025.

STC.587/2018.

ம.சா.2, பாமாபதி த/பெ.ராமசந்திரன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.

மனுதாரர் எதிரிக்கு எந்த தேதியில் கடன் கொடுத்தார் என்றால் தேதி, மாதம் ஞாபகம் இல்லை. 2010ம் வருடம் கடன் தொடங்கப்பட்டது. எனது நிருபன வாக்குமூலத்தில் 2010ம் வருடம்தான் மனுதாரர் எதிரிக்கு கொடுக்கப்பட்ட கடன் தொடங்கப்பட்டது என்று கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை. மனுதாரருக்கும் எதிரிக்கும் பல கொடுக்கல் வாங்கல் உள்ளது என்று சொல்லியுள்ளேன், மனுதாரருக்கும் எதிரிக்கும கொடுக்கல் வாங்கல் விவரம் யார் சொல்லி எனக்கு தெரியும் என்றால் சில தகவல்கள் இருவரும் சொல்லி தெரியும். மனுதாரருக்கும் எதிரிக்கும் இடையே உள்ள கொடுக்கல் வாங்கல் விவரம் எனக்கு 2010ம் ஆண்டு முதலே தெரியும். மனுதாரர் ராதாகிருஷ்ணன் எனது தாய்மாமா ஆவார். மனுதாரருக்கு எதிரியை நேரடியாக தெரியுமா அல்லது எதிர்மனுதாரரின் தந்தையின் மூலமாக தெரியுமா என்றால் எதிர்மனுதாரரின் தந்தை மூலமாகவும் தெரியும் எதிரியை நேரடியாகவும் தெரியும். மனுதாரர் எதிரிக்கு கடன் கொடுத்த விவரம் எதிர்மனுதாரரின் தந்தைக்கு தெரியுமா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அதேபோல் எதிரி மனுதாரருக்கு காசோலை கொடுத்த விவரம் எதிர்மனுதாரின் தந்தைக்கு தெரியுமா என்றால் தெரியும். மனுதாரர் எதிரிக்கு கடன் கொடுத்த விவரத்தையும் அதற்கு எதிரி காசோலை கொடுத்த விவரத்தையும் எதிரியின் தந்தைக்கு தெரியும் என்ற விவரம் என்னிடம் கூறினாரா என்றால் கூறவில்லை. எனது தந்தை பெயர் ராமசந்திரன். எனது தந்தையின்மீது எதிரி கொடுங்காலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அது எது சம்மந்தமான புகார் என்றால் என் தகப்பனார் கொடுத்திருந்த கடன் சம்மந்தமாக எதிரியை போனில் மிரட்டியதாக புகார். புகாரில் எனது தகப்பனார் மற்றும் ராதாகிருஷ்ணன் பெயர் குறிப்பிட்டு கொடுத்தாரா என்றால் என் தகப்பனார் பெயரை மட்டும் குறிப்பிட்டு கொடுத்துள்ளார். நான் சொல்வது தவறு எதிரி என் தந்தையின்மீதும் எதிரி ராதாகிருஷ்ணன்மீதும் சேர்த்துதான் புகார் கொடுத்திருந்தார் நான் உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி புகாரின் பேரில் என் தகப்பனார் பெயரிலும் எதிரியின்மீதும் நீதிமன்றத்தில் தனிபுகார் தாக்கல் செய்யப்பட்டு உத்தரவின்பேரில் இருவரையும் போலிசார் விசாரித்தபோது இருவரும் எதிரி காசோலை எதுவும் கொடுக்கவில்லை அதனால் நாங்கள் தாக்கல் செய்துள்ள காசோலை வழக்கினை திரும்ப பெற்றுக்கொள்கிறோம் என்று எழுதிகொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் அது சரியல்ல.

மனுதாரர் தாக்கல் செய்துள்ள புகார் மனுவினை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை. மனுதாரர் வழக்கில் தன்னை விசாரிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுவிட்டது என்ற விவரத்தினை கூறினாரா என்றால் தெரிவித்தார். அதில் தான் வாதிக்கு 2010ஆம் ஆண்டு முதல் கடன் கொடுத்த விவரத்தினை பற்றி என்னிடம் கூறினாரா என்றால் தெரிவித்தார். மேற்படி வழக்கின் சாட்சியத்தில் எதிரியின் தந்தை

உயிருடன் இருந்த காலத்தில் காசோலை கொடுக்கப்பட்டது என்ற விவரத்தினை சொன்னதாக என்னிடம் சொன்னாரா என்றால் சொல்லவில்லை.

மனுதாரருக்கும் எதிரிக்கும் நேரடியாக கொடுக்கல் வாங்கல் ஏதும் இல்லை என்றும், வழக்கு காசோலைகளை பாமாபதியிடம் எதிரி கொடுத்திருந்தது அவற்றை பாமாபதி என்னிடம் கொடுத்து வழக்கு தாக்கல் செய்ய சொன்னார் என்றும், எதிரி மனுதாரருக்கு எப்போதும் நேரடியாக காசோலை கொடுத்தது இல்லை என்றும் இந்த வழக்கிற்கு முன்னர் எதிரி மனுதாரர்மீதும் என் மாமா ராமசந்திரன்மீதும் கீழ்கொடுங்காலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார் என்றும் அந்த புகார்மீதான விசாரணையில் இந்த வழக்கை வாபஸ் பெற்றுக்கொள்ள அறிவுறுத்தினார் என்று மனுதாரர் நீதிமன்ற விசாரணையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மனுதாரர் வழக்கில் சொல்லாத விஷயங்களை நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

பொதுவாக ஒரு நபர் மற்றொரு நபர்மீது காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்ட பிறகு அந்த நபருக்கு கடன் கொடுப்பாரா என்றால் அதன் பிறகும் பழக்கம் வழக்கம் சரியாக இருந்தால் கொடுக்கும் வாய்ப்பு உள்ளது. ஒரு நபர் தன்னை ஏமாற்றிவிட்டதாக புகார் கொடுத்துள்ள நிலையில் மீண்டும் அதே நபரிடம் கடன் வாங்கமாட்டார் என்று சொன்னால் எதிரி கொடுத்த புகார் கடன் சம்மந்தமாக பணத்தை கேட்டு போனில் மிரட்டியதாக புகார். மனுதாரர் என்ன வேலை செய்து வருகிறார் என்றால் விவசாய வேலை செய்து வருகிறார். மனுதாரருக்கு எவ்வளவு நிலம் உள்ளது என்றால் தற்போது 3 1/2 ஏக்கர் நிலம் உள்ளது. மனுதாரர் தனக்குள்ள 3 1/2 ஏக்கர் நிலத்தை விற்றுவிட்டதாக சொல்லியுள்ளார் என்றால் அவருக்கு உள்ள புஞ்சை நிலத்தை விற்றுவிட்டார் நஞ்சை நிலம் உள்ளது.

மனுதாரரின் வழக்கறிஞரை தெரியும். மனுதாரருக்கு நான் தான் வழக்கிறஞரை வைத்துகொடுத்தேன் என்றால் சரியல்ல. மனுதாரரிடமிருந்து எதிரி எந்தவொரு கடன் தொகையும் வாங்கவில்லை என்றாலும் அதனால் எதிரிக்கு வழக்கு காசோலையை கொடுக்கவில்லை என்றாலும் எதிரி என் தந்தையிடம் கொடுத்திருந்த காசோலையை பயன்படுத்தி மனுதாரரை வைத்து எதிரிக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு காசோலை எந்தவொரு மறுபயனுக்காகவும் கொடுக்கப்பட்டது அல்ல என்று சொன்னால் சரியல்ல. என்னால் தயாரிக்கப்பட்ட இவ்வழக்கு காசோலையை எனது தாய்மாமனான மனுதாரரை வைத்து இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு ஒருமுதிர்வடையாத காசோலை வழக்கு என்பதாலும் தள்ளுபடி செய்யதக்கது என்று சொன்னால் சரியல்ல. 2007ம் வருடம் எதிரி எனது தந்தையிடம் பெற்ற கடன் முழுவதையும் 2 மடங்காக திருப்பி செலுத்திவிட்டார் என்றும், அப்போது கொடுத்த ஆவணத்தினை கொண்டு எனது தாய்மாமன் மற்றும் தந்தையின் மூலமாகவும் எதிரிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

மேற்படி எதிரியால் கொடுக்கப்பட்ட ஆவணங்களை திரும்ப கேட்டுதான் எனது தந்தை மற்றும் என் தாய்மாமன்மீதும் எதிரி கீழ்கொடுங்காலூர் காவல் நிலையத்தில் காசோலை வழக்கு தாக்கல் செய்வற்கு முன்பாகவே புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரி ஒரு ஒபியோபதி மருத்துவர் என்றால் சரிதான். அவருக்கு வீடு மற்றும் நிலபலன்கள் உள்ளது என்று சொன்னால் சரிதான். அவர் கடன் வாங்கவேண்டிய அவசியம் இல்லையென்று சொன்னால் சரியல்ல. எதிரியும் நானும் கல்லூரி நண்பர் என்பதால் அவா் சொத்தின்மீதுள்ள பற்றின்மீது காசோலையை கொண்டும் என் தந்தை மூலமாகவும் மனுதாரர் மூலமாகவும் வழக்கினை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்று சொன்னால் சரியல்ல.